வாரம் - 10 ஊக்கப் பாடல் எண் - 10

# திருக்குறள்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

கற்றதனா லாயபய னென்கொல் வாலறிவன்
நற்றாழ் தொழார் எனின்.

மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

திருவள்ளுவர்

வாழ்த்து பாடி முடித்த பிறகு மாணவர்கள் விரும்புகிற இசையோடு பாடுகிற, உடல் அசைவுடன் பாடுகிற 6 / 8 வரிகள் உடைய பாடல்களை தேர்வு செய்து பாடவைத்து ஊக்குவிக்கவும்.

பிறகு மாணவர்களிடம் அன்பாகப்பேசி கடந்த ஏழு நாள்களில் என்ன செய்தீர்கள் என்று இயல்பாகப் பேசவைத்து அவர்களை உங்களோடு இணைக்கவும்.

பிறகு சென்ற வாரம் எழுதிய வீட்டுப் பாடங்களை கேட்டு வாங்கித் தொகுப்பில் வைக்கவும்.



# வினாச் சொற்கள் அறிமுகம்

| | | |
|---|---|---|
| WHAT | = | என்ன |
| WHY | = | ஏன் |
| WHERE | = | எங்கு |
| WHEN | = | எப்பொழுது |
| WHICH | = | எது |
| HOW | = | எப்படி |

மேலுள்ள சொற்களை மாணவர்கள் உணரச்செய்யவும்

வினாச் சொற்களைச் சிறிய தொடர்களை இணைத்துக் காட்டி உள்வாங்கச் செய்யவும்

உன்பெயர் என்ன ? இது என்ன ? அது என்ன ?

# வினாப்பயிற்சியும் விடையளித்தலும்

## உன் பெயர் என்ன ?

( தந்தை பெயரை முதன்மைப்படுத்தி ) **என் பெயர் மணி நடேசன்**

( தாய் பெயரை முதன்மைப்படுத்தி ) **என் பெயர் கமலா நடேசன்**

## இது என்ன ?

**இது என்னுடைய பை**

## அது என்ன ?

**அது என்னுடைய மிதியடி**

## உன் கையில் உள்ளது என்ன ?

**என் கையில் புத்தகம் உள்ளது.**

வினாக்களை மாணவர்கள் கேட்கவும், மாணவர்களே அதற்கான பதில் சொல்லவும், பயிற்றுவிக்கவும்.

**என்ன** என்ற வினாச் சொல்லை வீட்டிலும் வகுப்பறையிலும் பயன்படுத்த ஊக்குவிக்கவும்




அழகாக எழுதவும் ஒலிக்கவும் பயிற்சி தரவும்.
எழுத்துகளை எங்கு தொடங்கி எங்கு முடிக்க வேண்டும் என்பதற்கும் பயிற்சி தரவும். எழுத்துகள் அழகாக இல்லை என்றால் நேர்கோடு வளைகோட்டுப் படங்களை எழுதுவதற்கு முன்பாகப் பயிற்சி தரவும்.

## வாரம் - 10

**மாணவர் செயற்பாடு எண் - 1**

**மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............**

( கற்றுக்கொண்ட ய் ய எழுத்துகளை கீழே எழுதிப் பழகவும் )

| ய் | ய | ய் | ய | ய் | ய |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# வாரம் - 10

## மாணவர் செயற்பாடு எண் - 2

மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............

( கற்றுக்கொண்ட ய் ய எழுத்துகளை கீழே வட்டமிடவும் )

யா யே யெ யொ - எழுத்துகளில் உள்ள ய எழுத்தை வட்டமிட்டாலும் சரியே

# மருந்தும் நோயும்!

பெரும்பாலான நோய்கள் நுண்ணிய உயிரிகளால், பொதுவாக சொல்வது என்றால் கிருமிகளால் ஏற்படுகிறது.

பிற நுண் உயிரிகளில் பெரும்பாலானவை பல நோய்களுக்கு மருந்தாக விளங்குகின்றது. 20-ம் நூற்றாண்டிற்கு முன் வரை ஏறக்குறைய எல்லா மருந்துகளும் இயற்கையினிடமிருந்து கிடைத்தவைகளே ஆகும்.

தாவரங்களும், பாக்டீரியாவும்தான் மிக முக்கியமான இயற்கை மருந்து மூலங்கள் ஆகும். நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகளை தயாரிப்பதில் பாக்டீரியாக்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

சில மருந்துகள் காளானிலிருந்து கிடைக்கிறது. அவைகளில் மிக முக்கியமானதும் அனைவரும் அறிந்ததுமான ஒன்று பென்சிலின்.

## மருத்துவ தாவரங்கள்!

மேற்கத்திய மருந்துகளில் பெரும்பான்மை வகைகள் தாவரங்களில் இருந்துதான் கிடைக்கின்றன. இன்று, மருந்துகளில் அதிகம் கூட்டுமுறைகளில்தான் தயாரிக்கப்படுகின்றன.

ஆஸ்பிரின். இவை சாலிசைலிக் ஆசிட்டில் இருந்து தயாரிக்கப்படுகிறது. அந்த ஆசிட் சாலிக் வகை புதர் செடியின் இலைகளிலும் தண்டுகளிலும் இருந்து கிடைக்கிறது. இந்த புதர் செடியின் வலிநிவாரண தன்மைகள் பல நூற்றாண்டுகளாக பிரசித்தம். அந்த காலத்தில் பிரசவ வலியை தாங்கி கொள்ள இந்த புதர் செடியின் இலைகளை மெல்லச் சொல்வார்கள்.

டிஜிடலிஸ். இது இதய செயல்பாட்டினிற்கு ஊக்கம் அளிக்கும் மருந்து. பாக்ஸ்கிளவுஸ் என்னும் தாவரத்தின் இலைகள் மற்றும் விதைகளிலிருந்து இது தயாராகிறது.

மார்பைன். இந்த மிக சக்தி வாய்ந்த வலி நிவாரணி ஒபியத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டு கிடைக்கிறது. இந்த மருந்து இப்போது செயற்கையாகவும் தயாரிக்கப்படுகிறது.

கொய்னா. இதுதான் பெரும்பாலான மலேரியா எதிர்ப்பு மருந்துகளின் மிக முக்கியமான சேர்க்கை பொருள். இது வெப்பமண்டல பகுதி மரமான, 'சின்சோனா' மரத்தின் பட்டையிலிருந்து எடுக்கப்படுகிறது. கொலம்பஸ் காலத்திற்கு முந்தைய காலத்திலிருந்தே தென் அமெரிக்க இந்தியர்கள், மலேரியாவிலிருந்து மீள இந்த பட்டையை மென்று இருக்கின்றனர்.

வின்பிளாஸ்டைன், வின்கிறிஸ்டைன். இந்த மருந்து மடகாஸ்கரில் வளரும் ஒரு பஞ்சு செடி வகையான 'கான்தரான்தஸ் ரோஸஸ்' என்கிற செடியிலிருந்து கிடைக்கிறது. வின்பிளாஸ்டைன் பல நோய்களுக்கு மருந்தாக உள்ளது. வின்கிறிஸ்டைன், ரத்தத்தில் வெள்ளை அணுக்கள் மிகுவதால் ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வு காண உதவுகிறது.

## புதிய ஆராய்ச்சி!

இன்றைய காலகட்டத்தில் மருத்துவ ஆராய்ச்சி என்பது செயற்கை மருந்துகளை செரிவூட்டுவதற்கும், இயற்கையான பொருட்களின் மருத்துவ குணங்களை பற்றி அறிந்து பயன்படுத்துவதற்கும் என முக்கிய குறிக்கோள்களை கொண்டுள்ளது.

உதாரணத்திற்கு, அமெரிக்க ரோடு தீவு பல்கலைக்கழகத்தில், விஞ்ஞானிகள் ஒரு செல் உயிரிகளிலிருந்து கெமிக்கல்களை பிரித்து அதை கேன்சருக்கு எதிரான உயிர் காக்கும் மருந்தாக பயன்படுத்தும் ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். ஒரு கனடா நாட்டு மருத்துவ ஆய்வு குழு மார்பின்னைவிட 3000 மடங்கு சக்தி வாய்ந்த வலி நிவாரணியை உருவாக்கியது. இந்த மருந்து பவ்வர் மீனின் விஷத்திலிருந்து தயாரிக்கப்பட்டது. இந்த மருந்து பாதுகாப்பானது மற்றும் நீண்ட நேரம் நீடிக்க கூடியது.

# வாரம் - 10

## மாணவர் செயற்பாடு எண் - 3

மாணவர் பெயர் ...................................... **நிலை**........... **நாள்**...............

( மாணவர்களே வகுப்பறையில் எழுத்தை இணைத்துப் படிக்க ஊக்குவிக்கவும். இதனை வீட்டிற்குக் கொடுத்து, பயிற்சி செய்து , அடுத்த வாரம் வரும் பொழுது **இயல்பாகப் படிக்க** ஊக்குவிக்கவும். மாணவர்கள் இதனை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கக் கூடாது. )

### நினைவூட்டல் -

**சக் மக் சக மக தட மத கத் பத் பத**

**நக பந் நட நத நத் சந கந**

**வச வட வத மத தட தவ பத**

**நவ கவ் தவ் பவ் பவ சவ**

**வவ் வ்வ வட்ட வடக வடக் வத்த**

**ய்ய கய கய் பய பய் மய மய்**



# வாரம் - 10

**வீட்டு வேலை எண் - 1**

மாணவர் பெயர் ....................................... நிலை........... நாள்...............

## த த் , ந ந் , வ வ், ய் ய

( எட்டு எழுத்துகளையும் ஒலித்துக் கொண்டே கீழே வட்டமிடவும்)

# மருந்தும் நோயும்!

பெரும்பாலான நோய்கள் நுண்ணிய உயிரிகளால், பொதுவாக சொல்வது என்றால் கிருமிகளால் ஏற்படுகிறது.

பிற நுண் உயிரிகளில் பெரும்பாலானவை பல நோய்களுக்கு மருந்தாக விளங்குகின்றது. 20-ம் நூற்றாண்டிற்கு முன் வரை ஏறக்குறைய எல்லா மருந்துகளும் இயற்கையினிடமிருந்து கிடைத்தவைகளே ஆகும்.

தாவரங்களும், பாக்டீரியாவும்தான் மிக முக்கியமான இயற்கை மருந்து மூலங்கள் ஆகும். நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகளை தயாரிப்பதில் பாக்டீரியாக்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

சில மருந்துகள் காளானிலிருந்து கிடைக்கிறது. அவைகளில் மிக முக்கியமானதும் அனைவரும் அறிந்ததுமான ஒன்று பென்சிலின்.

## மருத்துவ தாவரங்கள்!

மேற்கத்திய மருந்துகளில் பெரும்பான்மை வகைகள் தாவரங்களில் இருந்துதான் கிடைக்கின்றன. இன்று, மருந்துகளில் அதிகம் கூட்டுமுறைகளில்தான் தயாரிக்கப்படுகின்றன.

ஆஸ்பிரின். இவை சாலிசைலிக் ஆசிட்டில் இருந்து தயாரிக்கப்படுகிறது. அந்த ஆசிட் சாலிக் வகை புதர் செடியின் இலைகளிலும் தண்டுகளிலும் இருந்து கிடைக்கிறது. இந்த புதர் செடியின் வலிநிவாரண தன்மைகள் பல நூற்றாண்டுகளாக பிரசித்தம். அந்த காலத்தில் பிரசவ வலியை தாங்கி கொள்ள இந்த புதர் செடியின் இலைகளை மெல்லச் சொல்வார்கள்.

டிஜிடலிஸ். இது இதய செயல்பாட்டினிற்கு ஊக்கம் அளிக்கும் மருந்து. பாக்ஸ்கிளவுஸ் என்னும் தாவரத்தின் இலைகள் மற்றும் விதைகளிலிருந்து இது தயாராகிறது.

மார்பைன். இந்த மிக சக்தி வாய்ந்த வலி நிவாரணி ஒபியத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டு கிடைக்கிறது. இந்த மருந்து இப்போது செயற்கையாகவும் தயாரிக்கப்படுகிறது.

கொய்னா. இதுதான் பெரும்பாலான மலேரியா எதிர்ப்பு மருந்துகளின் மிக முக்கியமான சேர்க்கை பொருள். இது வெப்பமண்டல பகுதி மரமான, 'சின்சோனா' மரத்தின் பட்டையிலிருந்து எடுக்கப்படுகிறது. கொலம்பஸ் காலத்திற்கு முந்தைய காலத்திலிருந்தே தென் அமெரிக்க இந்தியர்கள், மலேரியாவிலிருந்து மீள இந்த பட்டையை மென்று இருக்கின்றனர்.

வின்பிளாஸ்டைன், வின்கிறிஸ்டைன். இந்த மருந்து மடகாஸ்கரில் வளரும் ஒரு பஞ்சு செடி வகையான 'கான்தரான்தஸ் ரோஸஸ்' என்கிற செடியிலிருந்து கிடைக்கிறது. வின்பிளாஸ்டைன் பல நோய்களுக்கு மருந்தாக உள்ளது. வின்கிறிஸ்டைன், ரத்தத்தில் வெள்ளை அணுக்கள் மிகுவதால் ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வு காண உதவுகிறது.

## புதிய ஆராய்ச்சி!

இன்றைய காலகட்டத்தில் மருத்துவ ஆராய்ச்சி என்பது செயற்கை மருந்துகளை செறிவூட்டுவதற்கும், இயற்கையான பொருட்களின் மருத்துவ குணங்களை பற்றி அறிந்து பயன்படுத்துவதற்கும் என முக்கிய குறிக்கோள்களை கொண்டுள்ளது.

உதாரணத்திற்கு, அமெரிக்க ரோடு தீவு பல்கலைக்கழகத்தில், விஞ்ஞானிகள் ஒரு செல் உயிரிகளிலிருந்து கெமிக்கல்களை பிரித்து அதை கேன்சருக்கு எதிரான உயிர் காக்கும் மருந்தாக பயன்படுத்தும் ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். ஒரு கனடா நாட்டு மருத்துவ ஆய்வு குழு மார்பின்னைவிட 3000 மடங்கு சக்தி வாய்ந்த வலி நிவாரணியை உருவாக்கியது. இந்த மருந்து பவ்வர் மீனின் விஷத்திலிருந்து தயாரிக்கப்பட்டது. இந்த மருந்து பாதுகாப்பானது மற்றும் நீண்ட நேரம் நீடிக்க கூடியது.

**வாரம் - 10** **வீட்டு வேலை எண் - 2**

**மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............**

(கற்றுக்கொண்ட எழுத்துகளைக் கீழே எழுதிக் கொண்டு வரவும் )

(எழுதும் பொழுது எழுத்துகளை ஒலித்துக் கொண்டே எழுதவும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ந<br>ந் | வ<br>வ் | ய் | ய | ய் | ய |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |